Advisory Board for salt

* 580 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that an Advisory Board for salt has been formed; and

(b) if so, the details thereof?

The Hon. Thiru S. MADHAVAN : (a) Yes.

(b) The constitution and functions of the Tamil Nadu State Board for satl and allied chemicals @ are laid on the table of the House separately.

திரு. என். கே. பழனிசாமி : சார், சர்க்கார் வைத்திருக்கக்கூடிய பதிலிலே, அந்த போர்ட் ஹைகிரேட் உப்பை அபிவிருத்தி பண்ணுவதற்கும், சர்வே பண்ணுவதற்கும்—வெளிநாடுகளிலே இந்த ஹைகிரேட் உப்புக்கு அதிக கிராக்கி இருப்பதால்—அந்த போர்ட் அதைச் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இதை அபிவிருத்தி பண்ணுவதிலே புதிய முறை ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம், ஒரு நிபுணர் குழுவை இதற்காக நியமித்து, சால்ட் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் என்ன என்ன தொடங்கலாம் என்று அறிக்கை தயாரித்திருக்கிறோம். அந்த அறிக்கை அடிப்படையிலே தொழில்கள் சம்பந்தமாக பீஸிபிலிட்டி பார்த்து, போர்ட் இப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தத் தொழிலிலே இதற்கு உதவித் தலைவராக இருக்கிற கெமிக்கல் மானேஜிங் டைரக்டர் ரமணியால் ஏற்கனவே, ஒரு உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும், அது நல்ல அபிவிருத்தி அடைந்து வருவதாகவும் சொல்லப்படுகின்றதே, அதேபோல், அவரே, இந்தத் துறையிலே நிபுணத்துவம் பெற்றுள்ள காரணத்தால், இந்த மாதிரி தொழிற் சாலையை ஆரம்பிக்க முன் முயற்சி எடுத்துக்கொண்டால் அதற்கான ஆதரவு இந்த அரசால் அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

@ 937–940 பக்கங்களில் இணைப்பு I- ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிச்சயம் ஆதரிக்கப்படும். உறுப்பினரே இதை ஆதரித்துப் பேசுகிற காரணத்தால், தீவிரமாக ஆதரிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உப்பை அடிப்படையாகக் கொண்டு சில தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழில்கள் எந்த எந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்படும்? கன்னியாகுமரியிலே உப்பு அதிகமாகக் கிடைக்கிற பகுதிகள் பல இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே ஏதாவது தொழிலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிச்சயம், கடற்கரை பகுதி பூராவும் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே கோவளம் பகுதியிலே முதல் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலேயும் இராமநாதபுரம் பகுதியிலேயும் இதுபற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியிலே எந்த எந்தப் பகுதியிலே இதுபோன்ற தொழில்களை அமைக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் குழு அமைத்தது நல்ல முயற்சி என்றுதான் கருதப்படுகிறது. அனேகமாக உத்தியோகஸ்தர்கள், சால்ட் மானுபார்க்ச்சரர்ஸ் அசோசியேஷன் பிரதிநிதிகள் தான் இதிலே இருக்கிறார்கள். சால்ட் சம்பந்தமான நிபுணர்கள், பேராசிரியர்கள், இது மாதிரி தொழிலிலே ரிசர்ச் பண்ணுகிற தொழில் பிரதிநிதிகள் இதிலே சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்போல், ஒரு தொழிலை நடத்துகிற நிபுணரைப் போட்டிருக்கிறோம். குருநாத் என்ற சால்ட் எக்ஸ்பர்ட்டைப் போட்டிருக்கிறோம். அவர்தான் அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார். வேறு யாரும் நிபுணர்கள் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்வோம் என்று சொன்னால், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: கோவளத்திலே ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவளம், செய்யூர், சூணாம்பேடு, தென்னாற்காடு மாவட்டத்திலே மரக்காணம் போன்ற பகுதிகளில்

தமிழ்நாட்டிலேயே, ஏராளமாக உப்பு கிடைக்கிறது. நான் சென்ற தொடர் கூட்டத்திலேயே கேட்டிருக்கிறேன். இந்த உப்பு தொழிற் சாலையைக் கொண்டு உரத் தொழிற்சாலை அமைக்க, ஜப்பான் நாட்டுத் துணை கொண்டு அமைக்க, நம்முடைய அரசு முயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செங்கற்பட்டு மாவட்டம் எப்படி கவனிக்கப்பட்டு வருகிறது என்பதை இதிலிருந்து அவர்கள் தெரிந்து கொள்வார்கள். கோவளத்திலே, பிரம்மாண்டமான கூட்டுத் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டம் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்படுகிறது என்று பொது மக்களிடத்திலே ஒரு கருத்து நிலவுகிறது. அரசால் ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்சாலையைப் பற்றி, குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் குழுவினர் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற கடற்கரைப் பகுதியில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு முடித்துவிட்டார்களா? ஏதாவது அறிக்கையை அரசுக்கு அனுப்பிவிட்டார்களா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே சொன்னேன். அப்படி ஆராயப்பட்டு ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

Suicide by prisoner in Mental Hospital.

* 581 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that a prisoner undergoing treatment at the Mental Hospital in Madras committed suicide about the 6th September 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிவப்பிரகாசம் என்ற மனநோய் குற்றவாளி 5—9—1973 அன்று சென்னை மனநோய் மருத்துவ மனையில் தற்கொலை செய்துகொண்டார்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, எந்த முறையிலே தற்கொலை செய்து கொண்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.